செ.வெ.எண்: 755/2016 நாள்: 25.10.2016

## பத்திரிக்கை செய்தி

தமிழ்நாடு கடல் மீன்பிடிப்பு ஒழுங்கு படுத்தும் சட்டம் மற்றும் விதிகள் 1983-ன்படி கன்னியாகுமரி மாவட்ட கிழக்கு கடற்கறை பகுதியை சார்ந்த விசைப்படகுகள் காலை 5.00 மணிக்கு தொழிலுக்கு சென்று இரவு 9.00 மணிக்கு கரை திரும்ப வேண்டும். ஆனால் கன்னியாகுமரி மாவட்ட கிழக்கு கடற்கரை பகுதியை சார்ந்த விசைப்படகுகள் தமிழ்நாடு கடல் மீன்பிடிப்பு ஒழுங்கு படுத்தும் சட்டம் மற்றும் விதிகள் 1983 –யை மீறி இரவு நேரங்களில் தங்கு கடல் மீன்பிடி தொழில் மேற்கொள்வதாலும். தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்ட கடற்கறை பகுதியிலிருந்து 3 நாட்டிக்கல் மைல்களுக்கு உள்ளாக தொழில் புரிவதாலும் தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்ட நாட்டுப்படகு மீனவர்களின் வலைகள் சேதப்படுத்தப்பட்டு வருவதாக தொடர்ந்து புகார்கள் பெறப்படுகின்றன. இது போன்ற சட்டத்திற்கு புறம்பான மீன்பிடிப்பு காரணமாக நாட்டுப்படகு மீனவர்களின் உயிருக்கும் உடைமைக்கும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது.

எனவே கன்னியாகுமரி மாவட்ட கிழக்கு கடற்கரையைச் சேர்ந்த விசைப்படகுகள் தமிழ் நாடு கடல் மீன்பிடிப்பு ஒழுங்கு படுத்தும் சட்டம் மற்றும் விதிகள் 1983 -யை மீறி திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்ட கடற்கறையோர பகுதிகளிலும், இரவு நேரங்களிலும் தொழில் செய்ய வேண்டாம் என அறிவுறுத்தப்படுகிறது. மேலும் தமிழ்நாடு கடல் மீன்பிடிப்பு ஒழுங்கு படுத்தும் சட்டம் மற்றும் விதிகள் 1983-யை மீறி தடைசெய்யப்பட்ட வலைகளான இரட்டைமடி மற்றும் சுருக்குமடி பயன்படுத்தகூடாது. தடையை மீறி வலைகளை பயன்படுத்தும் மீன்பிடி கலன் உரிமையாளர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.

எனவே தமிழ்நாடு கடல் மீன்பிடிப்பு ஒழுங்கு படுத்தும் சட்டம் மற்றும் விதிகள் 1983 –யை மீறி இரவில் மீன்பிடி தொழில் புரியும் விசைப்படகுகள் மற்றும் தடைசெய்யப்பட்ட மீன்பிடி வலைகளை (இரட்டைமடி மற்றும் சுருக்குமடி) பயன்படுத்தும் மீன்பிடிக்கலன் உரிமையாளர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் தெரிவிக்கப்படுகிறது.

மாவட்ட ஆட்சித் தலைவர்
கன்னியாகுமரி மாவட்டம்

---

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.**